மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, குறைந்தது 6 ஆண்டு காலம் ஆகும். 5 ஆண்டு காலத்திற்குள் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, தூத்துக்குடி, மேட்டூர் திட்டத்திற்குக் கிட்டத்தட்ட 70 கோடி, 65 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டு 4 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. ஏன் ஒதுக்கிய தொகையைவிடக் குறைவாகச் செலவு செய்திருக்கிறார்கள். தூத்துக்குடி திட்டம் 78-ல் தான் முடியும் என்று சொல்கிறார்கள். அதற்கு முன்னால் முடிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா? அதேமாதிரி மேட்டூர் திட்டம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் வரும் என்று சொல்கிறார்கள். அதையும் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்க அனுமதி பெற்று இருக்கிறோம். ஏற்கனவே அதற்கு வேண்டிய பாயிலர்கள் வாங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பூர்வாங்க வேலைகள் சென்ற ஆண்டு முதலே நடைபெற்று வருகின்றன. மேட்டூர் மின்சார நிலையத்தைப் பொறுத்த வரையில் நிலக்கரி எடுத்து வருவதில் சிரமம் இருக்கிறது என்று திட்டக்குழுவினர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்காளத்திலிருந்து தூத்துக்குடிக்கு நிலக்கரி கொண்டு வருவதற்குச் சிரமம் இருக்காது என்பதால், அதற்கு உடனடியாக அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் ஆந்திராவிலிருந்து போதிய அளவிற்கு நிலக்கரி கொண்டு வரமுடியுமா என்பதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் அனுமதி கொடுக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு அடுத்து மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை வரப் போகிறது. அப்போது விரிவாகப் பேசிக் கொள்ளலாம்.

Vigilance cell in Religious Endowments Department.

*195 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any Vigilance Cell is functioning in the Hindu Religious and Charitable Endowments department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Theft of jewels from Gunaseelam temple.

* 196 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that jewels belonging to the Gunaseelam temple in Tiruchirappalli district were stolen about the 7th April 1973 ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, (அ) ஆம், 2—4—1973-அன்று நகைகள் களவாடப்பட்டன.

(இ) 1960-ம் ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ. 4,393-80 மதிப்புக் கொண்ட 15 நகைகள் களவாடப்பட்டன. கல் இழைத்த திருமண் மதிப்பு ரூ. 200, மூலவர் கண்மலர் ஜோடி ரூ. 147, இப்படி கிட்டத்தட்ட 15 நகைகள் ஒட்டு மொத்தமாக ரூ. 4,393-80க்குக் களவாடப்பட்டுள்ளன.

Thiru N. DENNIS : May I know, Sir, whether any step has been taken against the servants of the temple who failed in their duties to safeguard the jewels ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அங்கேயுள்ள கோவில் ஊழியர்கள் பகல் 12 மணி வரை அன்று கோவில் காரியங்களையெல்லாம் செய்து இருக்கிறார்கள். பிற்பகலில் கோவிலுக்குள் ஒரு பகுதியில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் உள்ளே நுழைந்து களவாடிச் சென்றிருக்கிறார்கள். போலீசார் புலன் விசாரணை மேற்கொண்டு, வழக்குப் பதிவு செய்து இருக்கிறார்கள்.

Idols unearthed in Guddur.

* 197 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that a number of idols were traced in the fields in Guddur in Dharmapuri district about 25th April 1973 ; and

(b) if so, the details thereof ?